# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 66/2017**

பெயர் : குமாரசாமி நாள் : 14.11.2022

வா.சா.1 – 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – குமாரசாமி - சத்திய பிரமாணத்தின் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

என்னுடைய நிலம் மற்றும் பிரதிவாதிகளின் நிலங்களுக்கு மேற்குபுறமாக பச்சியம்மன் கோவிலுக்கு போகக்கூடிய சாலை உள்ளது என்றால், சரிதான். முதலில் மண் சாலையாக இருந்தது, தற்போது அதை தார் சாலையாக மாற்றிவிட்டார்கள். அந்த சாலையானது தென்வடலாக செல்கிறது என்றால், சரிதான். அந்த சாலையை ஒட்டி கிழபுறமாக சர்வே எண் 256 என்ற நிலம் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 256 க்கு கிழபுறமாக சர்வே எண் 254 உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 254 ல் எனக்கும், பிரதிவாதிகளுக்கும், மற்றும் மற்ற நபர்களுக்கும் நிலம் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 256 ல் உள்ள நிலம் கிராம உதவியாளர்களாக பணிபுரிந்து வருபவர்களாக ஒதுக்கப்பட்ட இடம் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 256 ல் சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து இல்லை என்று சொன்னால், சரிதான். சர்வே எண் 256 ல் 14 செண்ட் நிலத்தை எனது தகப்பனார் ஒரு பச்சிமுத்து என்பவரிடமிருந்து கடந்த 1991 ம் வருடம் வாங்கியுள்ளார். அதற்கு முன்பு அந்த நிலம் தங்களுக்கு சொந்தமில்லை என்று சொன்னால், சரிதான். 2 ம் பிரதிவாதி தனக்கொடி என்பவர் சர்வே எண் 256 ல் நிலம் வாங்கியுள்ளார் என்றால், சரிதான். அவர் 1992 ம் வருடம் வாங்கினார். மொத்தமாக 20 செண்ட் நிலத்தை கிரையம் பெற்று அதில் 6 செண்ட் நிலத்தை அவருடைய சகோதரரான 4 ம் பிரதிவாதி பழனியப்பனுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். 2, 4 பிரதிவாதிகள் சர்வே எண் 256 ல் உள்ள அவர்களின் நிலத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால், சரிதான். சர்வே எண் 254, 256 ஆகியவைகளில் நான் வீடு கட்டவில்லை. தன்னுடைய நிலமான சர்வே எண் 254 ல் உள்ள நிலத்திற்கு சர்வே எண் 256 ன் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால், சரிதான். சர்வே எண் 254 ஆனது பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 256 ல் கிரையம் பெற்ற நிலத்திற்கு

இணையாக சர்வே எண் 254 ல் தனக்கு நிலம் உள்ளது என்றால், சரிதான். அதேபோல் பிரதிவாதிகளுக்கு சர்வே எண் 256 ல் கிரையம் வாங்கிய நிலத்திற்கு இணையாக சர்வே எண் 254 ல் இடம் உள்ளது என்றால், சரிதான். 2 ம் பிரதிவாதி நிலத்திற்கு கிழபுறமாக 2 ம் பிரதிவாதியின் பெரியப்பா அர்த்தனாரி என்பவரின் நிலம் உள்ளது என்றால், சரிதான். அர்த்தனாரி நிலத்திற்கு கிழக்கே தனக்கு நிலம் உள்ளது என்றால், சரிதான். எனது நிலத்திற்கு கிழக்கே 2 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலமும், கிணறும் உள்ளது என்றால், சரிதான். தனது நிலமும், பிரதிவாதிகள் நிலமும் ஒரே பகுதியாக இல்லாமல், கலந்துதான் உள்ளது என்றால், சரிதான். தனது பாகத்திற்கு கிழபுறமாக உள்ள கிணற்றில் 2 ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பாத்தியம் உள்ளது என்றால், சரிதான். அந்த கிணற்றிற்கு அருகில் 2 ம் பிரதிவாதிக்கு ஒரு வீடு உள்ளது என்றால், சரிதான். தன்னுடைய நிலமான சர்வே எண் 254 நிலத்திற்கு வடபுறமாக உள்ள கிணற்றில் தனக்கும் அர்த்தனாரி குடும்பத்திற்கும் சரிபாதி பாத்தியம் உள்ளது என்றால், சரிதான். தனது நிலப்பகுதியானது கிணறு உள்ள பகுதியிலிருந்து சுமார் 3 அடி உயரம் இருக்கும் என்று சொன்னால், சரியல்ல. சுமார் 1 அடி உயரம் இருக்கும். மண் சரியாமல் இருக்க கல் கட்டு கட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த கிணற்றிலிருந்து தன்னுடைய இரு பகுதியில் உள்ள நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளலாம் என்றால், சரிதான். அதேபோல் 2 ம் பிரதிவாதி அவருடைய கிணற்றிலிருந்து அவருக்கு சொந்தமான சர்வே எண் 254 ல் மேற்குபுறமாக உள்ள நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிக் கொள்கிறார் என்றால், சரிதான். அதற்கான தண்ணீர் வாய்க்கால் வசதி உள்ளது என்றால், சரிதான். அந்த வாய்க்கால் தன்னுடைய நிலத்தின் வடக்குபுறமாக செல்கிறது என்றால், சரிதான். அந்த வாய்க்கால் தன்னுடைய கிணறு வரை சென்று, அவர்கள் வயல்களுக்கு செல்கிறது. அவ்வாறு 2 ம் பிரதிவாதி தண்ணீர் எடுத்து செல்ல தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அந்த பகுதியில் முன்பு நிலத்தடி வழியாகவும் குழாய் மூலமாக தண்ணீர் எடுத்து செல்லப்பட்டது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வாய்க்காலை ஒட்டி ஒரு வரப்பு உள்ளது என்றால், சரிதான். அதில் யார் வேண்டுமென்றாலும் சென்று வரலாம். பிரதிவாதிகள் அந்த வரப்பு வழியாகத்தான் அவர்களுடைய காட்டிற்கு சென்று

வருகிறார்கள் என்றால், சரிதான். பிரதிவாதிகளுக்கு இதை தவிர வேறு வழி இல்லையென்று சொன்னால், சரிதான். இந்த தடத்தின் தொடர்ச்சி சர்வே எண் 256 வழியாக சென்று, பஞ்சாயத்து ரோடை அடைகிறது என்றால், சரிதான். இவ்வாறுதான் பிரதிவாதிகள் காலம் காலமாக சென்று வருகிறார்கள் என்றால், சரிதான். சர்வே எண் 254/1 ல் உள்ள நிலமானது 2 ம் பிரதிவாதியின் தாத்தா கருங்கண்ணன்(எ) பச்சமுத்து குடும்பத்திற்கு பாத்தியமானது என்று சொன்னால், சரியல்ல. மேற்படி நிலமானது கஸ்தூரிப்பட்டியை சேர்ந்த ஒரு பச்சியம்மாள் என்பவருக்கு சொந்தமானது. பிரதிவாதிகள் தரப்பில் 16.04.1936 ம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் கருங்கண்ணன்(எ) பச்சமுத்துவுக்கு சர்வே எண் 254/1 ல் 6 ல் 1 பங்கு பாத்தியம் என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் கருங்கண்ணன் மனைவி பழனியம்மாளுக்கு 8 ல் 1 பங்கு பாத்தியம் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி இடங்கள் நீங்கலாக சர்வே எண் 254/1 ல் உள்ள நிலங்கள் கருங்கண்ணன்(எ) பச்சமுத்துவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. கருங்கண்ணன்(எ) பச்சமுத்து குடும்பத்தார் தங்களிடம் கடன் வாங்கியிருந்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. நெருக்கமான உறவுமுறை காரணமாக கடனுக்காக ஒரு பெயரளவிலான ஆவணத்தை தனது தாயார் பெயரில் எழுதி வைத்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. ஆவணம் நாங்கள் வைத்திருந்தாலும், சுவாதீனம் பிரதிவாதிகளிடம்தான் உள்ளது என்று சொன்னால், சரியல்ல. அந்த கடனை கடந்த 1980 ம் ஆண்டே செலுத்திவிட்டார்கள் என்று சொன்னால், சரியல்ல. கடனை திருப்பி கொடுத்ததால்தான் 1 ம் பிரதிவாதிக்கு எனது தாயார் 03.03.1980 ல் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக சர்வே எண் 254/1 ல் உள்ள நிலத்தை கொடுத்தார் என்று சொன்னால், சரியல்ல. அதேபோல் மற்றொரு சகோதரரான அர்த்தனாரி என்பவருக்கும் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணப்படிதான் வழக்கு சொத்துக்கள் சொந்தமானது என்று சொன்னால், சரியல்ல. கடந்த 1980 ம் ஆண்டுக்கு முன்பாகவே பிரதிவாதிகள் வழக்கு சர்வே எண்ணில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கு

பின்னிட்டுதான் பிரதிவாதிகளுக்கு சர்வே எண் 254/1ல் நிலம் சொந்தம் என்று கூறுகிறேன் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால்தான் மேற்படி ஆவண விபரங்களை குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லையென்றாலும், எந்த ஆவணங்களையும் குறியீடு செய்யவில்லை என்றாலும், சரியல்ல. இவைகளை சொன்னால் அது வழக்கிற்கு எதிராக சென்றுவிடும் என்பதால்தான், நான் கூறவில்லையென்று சொன்னால், சரியல்ல. நான் எனது தகப்பனார் கிரையம் பெற்ற நிலத்திற்கு அதிகமாக அனுபவத்தில் உள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் /குமாரசாமி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.